வாக்குமூலம்

உரிமையியல்மற்றும்குற்றவியல்நடுவர்நீதிமன்றம், மாதவரம்.

வழக்குஎண். CC 239/2021

வழக்குசாட்சி LW2/PW2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வம் | ஜாதி | |
| கணவர்/தந்தை | கலைமணி | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 36 |

தேதி 20.07.2026

எதிரிகள் ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் மாதவரம் பகுதியில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது அம்மா. ஆஜர் எதிரி எனது தந்தை ஆவார். எங்கள் பூர்வீக நிலத்தை எனது தந்தை விற்றுவிட்டு அந்த பணத்தைக் கொண்டு அலமாதியில் தனது இரண்டாவது மனைவிக்கு வீடு கட்டி கொடுத்துள்ளார். அதை தெரிந்து எனது தாயார் மனஉளைச்சலால் புகார் அளித்துள்ளார். மேற்படி புகார் குறித்து எனது தாயார் அளித்த புகாரின் பேரில் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் சொத்து வேண்டி வழக்கு நடந்துக் கொண்டு இருந்தது. அங்கிருந்த வழக்கினை இந்நீதிமன்றத்திற்கு மாற்றி இங்கு நடந்துக் கொண்டிருந்கிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

எனது அப்பாவிற்கு எங்கு சொத்து உள்ளது என்றால் திருவண்ணாமலையில். வேறு எங்காவது சொத்து உள்ளதா என்றால் காட்டாங்குளத்தூரில் உள்ளது. காட்டாங்குளத்தூர் சொத்தினை விற்று

6 லட்சம் ரூபாயினை என்னிடம் தான் கொடுத்தார் என்றால் என்னை அழைத்துச் செல்லவில்லை, எனது தம்பி கண்ணனை அழைத்துச் சென்றார். பணம் தரவில்லை. எனக்கு இவ்வழக்கினைப் பற்றி விவரங்கள் ஏதும் தெரியாது என்றாலும் இது சொத்து தொடர்பான வழக்கு அல்ல என்றால் சரியல்ல. அம்மாவுக்கு ஜீவனாம்சமும், டைவர்சும் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே இந்த வழக்கிற்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.